THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 29 September 2016 Issue - 9

ஆசிரியர் உரை

# பேதுருவிடமிருந்து...

பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களை அலங்கரிக்கும் அப்போஸ்தலர்களைப் பற்றி பேசுவதும், எழுதுவதும் ஓர் அலாதியான அனுபவம். தேவதாசர்கள் அனைவரும் இவர்களைப் பற்றி பேசவும், எழுதவும் பெரிதும் விரும்புவர். அதிலும் பேதுரு, யோவான், பவுல் போன்றவர்களென்றால் கேட்கவே வேண்டாம். ஏனெனில், வெகு விபரமாகச் சொல்லப்பட்டிருக்கும் இவர்கள் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக் கொள்வதற்கு ஏராளமான காரியங்களுண்டு. ஆகவேதான், பரிசுத்த வேதாகமம் இவர்கள் பற்றியும், இவர்களின் ஆத்தும ஆதாயப் பணி பற்றியும் நமக்கு விரிவாகத் தந்திருக்கிறது. ஆயினும், அப்போஸ்தலர்கள் அனைவர் பற்றியும் நாம் ஒருசேரப் பார்க்க முடியாததாகையால், இப்பொழுது பேதுருவை மாத்திரம் தெரிந்து கொள்வோம்.

ஒரு சமயத்தில் யோவான் ஸ்நானகனுடைய சீஷனாயிருந்தவனும், சத்தமில்லாமல் செயல்படுவதில் சாதுரியவானுமான அந்திரேயா, தன் சகோதரனாகிய பேதுருவை இயேசுவிடம் அழைத்து வந்தான். அப்படி அழைப்பதற்கு முன்பாகவே, அவனை யாரிடத்தில் அழைத்துப் போகிறேன் என்ற “ மாபெரும் உண்மையையும் ” சொல்லிவிட்டான் (யோவா. 1: 40 - 42 ). இங்கே மாபெரும் உண்மை என்று நான் சொல்வதற்கு காரணம் உண்டு. எப்படியெனில், இயேசுவை, **மேசியா** என்று அடையாளம் காண வேண்டியவர்களே, அடையாளம் காண முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்த சமயம் அது. ஒருவேளை கொஞ்சம் அடையாளம் கண்டு

கொண்டவர்களும், அங்கீகரிக்கத் தயங்கிக் கொண்டிருந்த நேரம். ஆனால், இந்த அந்திரேயாவோ தன் சகோதரனிடம், " மேசியா " வைக் கண்டோம் என்று தெளிவாகக் கூறி அழைத்துச் சென்றான்.

அவன் இயேசுவண்டை வந்தவுடன், " **இயேசு அவனைப் பார்த்து: நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம்** " ( யோவா 1:42 ). பேதுரு என்பதற்கு "பாறை " என்று பொருள்படும் என்பது நாமறிந்ததே. தான் தெரிந்து கொண்ட 12 சீடர்களில் நமது பேதுருவின் பெயரைத் தான் அவர் மாற்றியுள்ளார் என்பதையும் நாம் இங்கே கவனிக்கத் தவறக்கூடாது.

பொதுவாகப் பேதுரு என்றாலே, மறுதலித்தவன் என்ற எண்ணமே அநேகராகிய நமக்கு மேலோங்கி நிற்கும். அத்தோடு அவனுடைய துடுக் குத்தனமும், அவசரமும் சேர்ந்து கொள்ளும். பேதுரு பற்றி,சில நேரங்களில் நாம் அப்படி நினைப்பதற்குச் சரியான முகாந்திரம் இல்லாம லில்லை. அதேசமயம், பேதுரு தேவனுடைய பார்வையில் ஆரம்பம் முதலே ஒரு சிறப்பிடம் பெற்றிருந்தான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. சில நேரங்களில் அவன் தடுக்கி விழுந்தாலும் உடனடியாக எழுந்து நிற்கும் உயரிய பண்பு அவனுக்குச் சொந்தம். நம்மைப்போல விழுந்த இடத்திலேயே குப்புறக் கிடக்கும் குணம் கொண்டவன் அல்ல பேதுரு.

சரி, இந்த அப்போஸ்தலன் பேதுருவை, இயேசுவானவர் பெயர் மாற்றம் செய்து அழைத்தது யோவான் 1 : 42 – ல். ஏதுமறியாத நிலையில், தன் சகோதரன் பேச்சைக் கேட்டு, இயேசுவண்டை வந்த சீமோன் பேதுரு தன்னுடைய கூடார வாழ்க்கையின் இறுதி நாட்களில், " **அவருடைய வாக்குத் தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்** " (2. பேதுரு 3 : 13) என்று கூறுகிறார். தரையைக் கூட சரியாகப் பார்க்காமல், ஒரு காலத்தில் தண்ணீர் மீது தன் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்த சீமோன் பேதுரு, இங்கே புதிய வானம் பற்றியும், புதிய பூமி பற்றியும் பேசுகிறாரே, அது எப்படி? கண்டிப்பாக இது ஓர் இரவிலோ அல்லது ஓர் நாளிலோ நடந்திருக்க முடியாது. படிப்படியாகத் தான் அந்த மாற்றத்தையும், உயரிய நிலையையும் அவன் அடைந்திருக்க வேண்டும். அப்படித்தானே.

நாமனைவருடம் கூட நம்முடைய வாழ்க்கையின் இறுதி நாட்களில் புதிய வானமும், புதிய பூமியும் நமக்காகக் காத்திருக்கிறதென்று சொல்ல ஆசைப்படுவோம். ஆனால், வெறுமனே ஆசைப்படுவதால் மாத்திரம் அது நமக்காகக் காத்துக்கொண்டிருந்து விடாது. நாமும், பேதுரு போல் பல

போராட்டங்களைச் சந்திக்க வேண்டும். ஒருவேளை நம்முடைய போராட்டத்தில் நாம் தோற்றுப் போனாலும், பேதுரு போல எழுந்து நிற்க வேண்டும். பேதுரு போல தேவனை நோக்கி, ஒவ்வொரு கட்டத்திலும், வளர்ந்து முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும். அப்பொழுது நமக்கும் புதிய வானமும், புதிய பூமியும் காத்துக் கொண்டிருக்கும்.

சரி பேதுரு எந்தெந்தக் கட்டங்களில், தேவனை நோக்கி வளர்ந்தான் என்று இப்பொழுது பார்த்துப் பயனடைவோம்.

**I வளர்ச்சியின் முதல்படி ( மாற்கு 1 : 16 - 18 )**

சீமோன் பேதுருவுடைய வளர்ச்சியின் முதல் படி அவன் அழைக்கப்பட்ட நாளிலேயே ஆரம்பமாகிவிட்டதென்று சொன்னால் அது மிகையாகாது.

இயேசுவானவரால் அழைக்கப்பட்டபோது, அவன் நிலை எப்படியிருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள். அவனுக்குச் சொத்தாக இரண்டு காரியங்கள் தான் இருந்திருக்க முடியும். ஒன்று, **கல்லாமை**, அடுத்தது **இல்லாமை**. ஆம், பெத்சாயிதா ஊரை சேர்ந்த எவரும் கல்வி கற்றவரல்ல. மற்றும், மீன்பிடி தொழிலை மையமாகக் கொண்ட யாரும் வசதியானவர்களுமல்ல. அவன் கண்டது கடலும், கடற்கரையும்; அவன் கொண்டது படகும், வலையும்; அவன் அறிந்தது மீன்பிடித்தலும், வலையை பழுது பார்த்தலும் : அவ்வளவுதான்.

ஆனால், இப்படிப்பட்ட பின்னணி கொண்டவனாக இருந்தாலும், இயேசுவானவர் அழைத்தவுடன் அவருக்குப் பின்னாக உடனடியாகச் செல்ல முடிவெடுத்தது, நமக்குச் சில செய்திகளைச் சொல்லுகிறது. ஆம், அழைக்கப்பட்ட அந்த நாளிலேயே தன்னுடைய வாழ்க்கைக்குப் புது அர்த்தம் கற்பிக்கத் தொடங்கி விட்டான் பேதுரு. கடலுக்குச் செல்வதும், மீன்களைப் பிடிப்பதும், விற்று வருமானம் ஈட்டுவதும், குடும்பத்தைப் பேணுவதும், வலைகளைப் பின்னுவதும் தான் வாழ்க்கையென்று உழன்று கொண்டிருந்தவன், தான் அழைக்கப்பட்ட நாளில், தன்னுடைய வாழ்க்கையை முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் காண ஆரம்பித்தான். கிடைத்த அழைப்பைத் தான் தேவனிடம் நெருங்கிச் சேர்வதற்கான பெரும் வாய்ப்பாகக் கருதினான். ஆகவே, அந்த அழைப்பை, அவரை நோக்கி முன்னேறுவதற்கான முதற்படியாக்கிக் கொண்டான்.

வெறும் சீமோனாக இருந்தவன், “ பேதுரு ” என்ற பெயருக்குண்டான முழு அர்த்தத்தோடு ஜொலிக்கும் மாணிக்கமாகப் பின்னாளில் திகழ்ந்ததற்கு காரணம். அவன்அழைக்கப்பட்ட நாளில் தன்னை அழைத்தவரைப் பற்றிப் பெற்றக்கொண்ட சரியானதொரு கண்ணோட்டம் தான் ஆம், இந்தக் கண்ணோட்டம் தான், அவனுடைய இறுதி நாளில், “ புதிய வானம் பற்றியும்,

புதிய பூமி பற்றியும் " பேசுவதற்கு ஆதாரமாக அமைந்தது.

அருமையானவர்களே, நாமும் நம்முடைய வாழ்வில் இயேசுவைக் கண்டிருக்கிறோம். ஒருவேளை, பேதுரு போல நேரிடையாகக் காணாவிட்டாலும் வேதத்தின் வாயிலாகவும், போதிக்கிறவர்களின் வாய்வழியாகவும் கண்டிருக்கிறோம். பேதுரு போல, நேரிடையாக அழைக்கப்படாவிட்டாலும், சுவிசேஷத்தினாலே அழைக்கப்பட்டிருக்கிறோம் (2. தெச . 2 : 14) அப்படியானால் அவரைப் பற்றிய நம்முடைய கண்ணோட்டம் எப்படியுள்ளது? ஒருவேளை மேசியாவாகிய இயேசுவைக் கண்டுகொள்ளும் வரை, பேதுருவைப்போல், நமக்குத் தெரிந்ததே உலகமென்றும், நாம் நடத்துவது தான் வாழ்க்கையென்றும் எண்ணிக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால், வாழ்க்கையென்பது, வயிற்றுப் பிழைப்புக்காக மாத்திரம் வாழ்வதல்ல, மாறாக, உயரிய நோக்கம் கொண்டதென்று இந்தக் கல்லாதவனாகிய பேதுரு, இல்லாதவனாகிய பேதுரு நமக்குச் சொல்லிக்கொடுக்கிறார்.

ஆம், இப்பூமிக்குண்டான வாழ்க்கை, வெந்ததைத்தின்று, விதி வந்தால் சாவோம் என்பதல்ல. தேவன் நம்மை இதற்காக இப்பூமியில் படைக்கவில்லை. அழியாத, நித்தியமானதொரு ஆத்துமாவை நம்மில் படைத்திருப்பதும் இதற்காக அல்ல. அப்போஸ்தலன் பவுல் சொல்லும்போது, இது ஒரு தெய்வீக அழைப்பு என்று கூறுகிறார். (எபே. 4 : 1) எவ்வளவு தான் செல்வமும், செல்வாக்கும் இருந்தாலும், அது நமக்கு வாழ்க்கையாகாது ( லூக். 12 : 15 ). இந்த அடிப்படை உண்மையை இயேசுவைக் கண்டுகொண்ட ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும். பேதுரு, இந்த உண்மையைத் தெரிந்த கொண்டபடியால் தான், எல்லாவற்றையும் விட்டு, இயேசுவை உடனடியாகப் பின்பற்ற முடிந்தது.

ஆகவே, அன்பானவர்களே புதிய வானமும், புதிய பூமியும் நமக்காகவும் காத்துக்கொண்டிருக்க வேண்டுமானால், நாமும் பேதுரு போல, தேவனிடமாய் வளர வேண்டும். தேவனை நோக்கி முன்னேற வேண்டும். அதற்கு நாம் செய்ய வேண்டிய முழு முதற்காரியம், பேதுரு போல, மேசியாவைப் பற்றிய சரியான கண்ணோட்டத்தைப் பெற்றுக் கொள்வதுதான். பெற்றுக் கொள்வோமாக !

**II வளர்ச்சியின் இரண்டாம்படி ( மத். 16 : 13 - 19 )**

சீமோன் பேதுருவுடைய வளர்ச்சியின் இரண்டாம் படியாக, இயேசுவின் ஒரு கேள்விக்கு அவன் அளித்த பதிலை ஆதாரமாக நாம் காட்டலாம் (16 : 16).

அப்போஸ்தலன் பேதுரு பற்றி இருக்கும் வேறொரு பரவலான அபிப்ராயம், அவர் உணர்ச்சிப் பூர்வமானவரென்பது. அவருடைய அவசர குணம்

அவருக்கு இப்படியொரு பெயரைப் பெற்றுத்தந்துள்ளது. ஆனால், அவர் அவர் உணர்ச்சிப்பூர்வமானவர் மாத்திரமல்ல, அவர் அறிவுப்பூர்வ மானவரும் கூட . கீழ்வரும் சம்பவம் அதை உறுதி செய்கிறது.

நமதாண்டவர் ஒரு சமயம், பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று பிரசங்கித்து விட்டு, பிலிப்பு செசரியாவின் திசைகளில் வருகிறார். அங்கே தன்னுடைய சீஷர்களிடம் இரண்டு கேள்விகளை எழுப்பினார். முதலாவது, மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று நினைக்கிறார்கள் என்பது. அடுத்து, நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்பது. இங்கே கவனியுங்கள். முதல் கேள்விக்கு, சீஷர்களில் பலர் பதில் சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே தான்,வசனம் 14, " **அவர்கள்** " என்று சொல்லு கிறது. ஆனால், இரண்டாம் கேள்விக்கு **பேதுரு மாத்திரமே** பதில் சொல்லி யுள்ளார். ஆம், " **நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து** " என்று . (16 : 16). இதிலிருந்து என்ன தெரிகிறது ? இயேசுவோடு கூட சுற்றித்திரிந்து, உண்டு, உறங்கி, அவருடைய வல்லமையான வார்த்தைகளைக் கேட்டு, அவரின் செய்கைகளின் அற்புதங்களைக் கண்ட ஏனைய சீஷர்கள் புரிந்து கொள்ளாத ஓர் உண்மையை இந்தக் கல்லாதவன் கனகச்சிதமாகப் புரிந்து வைத்திருந்தான்.

இவனின் இந்த பதிலுக்கு பின் தான், இயேசு அவனைப் பார்த்து, யோனாவின் குமாரனாகிய சீமோனே, " **நீ பாக்கியவான்** " என்று கூறினார். தன் தொழிலையும், தன் ஊரையும் விட்டு, உடனடியாக அவரைப் பின்பற்றி வந்தபொழுது, இயேசு அவனைப் " பாக்கியவான் " என்று சொல்லாமல், தன்னைப் பின்பற்றி வந்தவன், எதைக் கற்றுக் கொள்ளவேண்டுமோ அதைக் கற்றுக்கொண்ட பிறகே அவனைப் " பாக்கியவான் " என்று சொல்லியுள்ளார். இதிலிருந்து, ஒருவன் அவரைப் பின்பற்றினால் மட்டும் போதாது, அவர் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய அளவுக்கு அறிந்து கொள்வது அவசியம் என்று வெளிப்படுத்துகிறார்.

எனக்கன்பானவர்களே, இன்றைய கிறிஸ்தவத்தில், இல்லாமலிருப்ப வைகளின் பட்டியலில் முதலிடம் வகிக்க முற்றிலும் தகுதியானது, **தேவ காரியங்களைப் பற்றிய அறிவுக்குறைவுதான்.** ஆம், தேவனைப் பற்றியும், அவரின் தன்மை பற்றியும், அவரின் இரட்சிப்பின் திட்டம் பற்றியும், அவர்தம் குமாரன் பற்றியும், அவரின் தியாகம் பற்றியும், அவர் சிந்தின இரத்தம் பற்றியும், அந்த இரத்தத்தை விலையாகக் கொடுத்து வாங்கப்பட்ட சபை பற்றியும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிற மக்கள், தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். இந்நிலை, மார்க்க

சீரழிவுக்கானதொரு அறிகுறி. இந்த உண்மையை, இப்படி நான் நேரிடையாகச் சொல்வதால், வாசகர்கள் யாரும் வருத்தப்பட வேண்டாம். நாம் ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், இது தான் யதார்த்த நிலை. ஆகவே, இதிலிருந்து விடுபடுவதற்கான கடும் முயற்சியில், இன்றைய கிறிஸ்தவம் உடனடியாக இறங்க வேண்டி வரும்.

**அவரைத் தெரிந்து கொள்வதிலே, பின்பற்ற முடிவெடுக்கிற விஷயத்திலே, பேதுரு போல நம் எல்லோருக்குமே வெற்றி கிடைத்துள்ளது.** ஆனால், அவரை வேத வசனங்களின்படி அறிந்து ஏற்றுக் கொள்ளுகிற காரியத்தில் நாம் பேதுருபோல வெற்றியடைந்திருக்கிறோமா? சொல்லுங்கள். தேவனைப் பற்றிய அறிவு, அவர் குமாரனாகிய இயேசுவைப் பற்றிய அறிவு, பரிசுத்த ஆவியானவர் தந்த வேத வசனங்களைப் பற்றிய அறிவு நமக்கில்லா விட்டால் என்ன நடக்கும் தெரியுமா? ஒரு சமயம், சதுசேயர் இயேசுவைச் சோதித்த பொழுது அவர் சொன்னதைக் கவனியுங்கள். " நீங்கள் வேத வாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங் கொள்ளுகி றீர்கள் " (மத். 22 : 29) என்று. தப்பான எண்ணம், பாவத்திற்கு வழி நடத்தும், பாவம் ஆத்துமாவை விலையாகக் கேட்கும். இந்த விலையைக் கொடுக்கத் துணிந்தால், நித்திய ஆக்கினை பரிசாகக் கிடைக்கும். எப்படி ?

தன்னைப் பின்பற்றித் தன்னோடிருப்பவர்கள், தன்னைச் சரியாக அறிந்திருக்க வேண்டுமென்று விரும்பிதான், " நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் " என்று கேட்டார். பேதுருவிடமிருந்து பதில் வந்த போது, அவர், " நீங்கள் " பாக்கியவான்கள் என்று சொல்லாமல், " நீ " பாக்கி யவான் என்று சொன்னார். இந்தப் பாக்கியமான நிலைதான், பின்னாளில், புதிய வானத்துக்காகவும், புதிய பூமிக்காகவும் காத்திருக்கச் செய்தது, ஆகவே, நாமும், வேத அறிவினடிப்படையில், அறிய வேண்டிய அனைத்தையும் அறிந்து, பாக்கியமான நிலையைப் பெறுவோமானால், பேதுருவுக்கு காத்திருந்த புதிய வானமும், புதிய பூமியும் நமக்கும் காத்திருக்கும்.

### III. வளர்ச்சியின் மூன்றாம்படி ( யோவான் 21 : 1 - 17 )

சீமோன் பேதுருவுடைய வளர்ச்சியின் மூன்றாம்படியாக, திபேரியாக் கடற்கரையில் பேதுருவுக்கு ஏற்பட்ட, அந்த தர்ம சங்கடமான சூழ்நிலையைச் சொல்லலாம்.

ஆம், அங்கே, பாக்கியவான் என்று இயேசுவால் மெச்சப்பட்ட பேதுரு தன்னுடைய பரலோக பயணத்தில் தடுக்கி விழுந்தபடியால், இயேசுவின் மீது அவன் கொண்ட அன்பு மீண்டும் சோதிக்கப்பட்டு, உறுதி செய்யப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. இச்சம்பவம், பேதுருவுக்கு இனிப்பான அல்லது இன்பமான ஒன்றல்ல. மாறாக, தலைக்குனிவை ஏற்படுத்திய

வேதனையான நிகழ்ச்சி. சக சீஷர்களுக்கு முன்பாக, பாக்கியவான் என்று பாராட்டப்பட்டு, அவர்கள் முன்பாக தலை நிமிர்ந்து நின்றவன், இச்சந்தர்பத்தில் அதே சீஷர்களுக்கு முன்பாக, தலை தாழ்ந்து நின்றான். பாவம் ! ஆனால், என்ன செய்வது, விதைத்ததை அறுத்துத் தானே ஆக வேண்டும்.

தன்னுடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, திரும்பவும் மீன்பிடிக்கச் சென்றுவிட்ட சீடர்களுக்குத் தன்னுடைய வல்லமையை மீண்டும் ஒரு முறை இயேசு நிரூபித்துக் காட்டினார். இது சீடர்களுக்கான மூன்றாவது தரிசனம் ( யோவான் 21 : 14 ) " அவர்கள் போஜனம் பண்ணின பின்பு, இயேசு சீமோன் பேதுருவை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன், ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர், என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார் " ( 21 : 15 ). இப்படி அவர் மூன்றுதரம் கேட்டார். அவர், மூன்றாம் முறை கேட்டபோது, பேதுரு " **துக்கப்பட்டான்** " என்று வசனம் ( 17 ) கூறுகிறது. அப்படியானால், பேதுருவை துக்கப்படுத்த வேண்டுமென்பது கிறிஸ்துவின் நோக்கமா ? இல்லை. மாறாக, தன் மீது அவன் கொண்ட அன்பை, மூன்று முறை மறுதலித்தபடியால், அந்த அன்பை இங்கே மூன்று முறை உறுதி செய்யட்டும் என்று எதிர்பார்த்துள்ளார். அவ்வளவுதான்.

இயேசுவின் இந்த அணுகுமுறை, பேதுருவுக்கு மிகுந்த மனவேதனை யைக் கொடுத்திருந்தாலும், அவன் ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக் கொண்டான். தான் இதுகாறும், இயேசுவின் மீது காட்டின அன்பு, அந்த மறுதலிப்பின் மூலம் அர்த்தமில்லாமல் போய்விட்டதென்று தெரிந்து கொண்டான். இனிக்காட்டும் அன்பு, இன்னும், ஆழமானதாக, நிலையா னதாக இருக்க வேண்டுமென்று கண்டு கொண்டான். அதுதான் இயேசுவின் எதிர்பார்ப்பு என்பதைப் புரிந்து கொண்டான்.

இயேசுவின் உரையாடலில் வேறொரு முக்கியமானதொரு காரியத்தை யும் நாம் இங்கே கவனிக்கத் தவறிவிடக்கூடாது. அந்திரேயாவால், பேதுரு அழைத்து வரப்பட்ட போது " இயேசு அவனைப் பார்த்து : நீ யோனாவின் குமாரனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார். கேபா என்பதற்கு பேதுரு என்று அர்த்தமாம். ( யோவான். 1 : 42 ) சீமோனாக இருந்தவன் இயேசுவால், " பேதுரு " என்று மாற்றப்பட்டிருந்தான். ஆனால், அதே பேது ருவைப் பார்த்து இயேசு " சீமோனே " என்று மூன்று முறை அழைத்தார். ஏன், என்ன காரணம் ? இயேசுவுக்கு மறதி அதிகமா ? என்ன தான் காரணம் ?

கவனியுங்கள், பேதுரு என்பதற்குப் " பாறை " என்று பொருள் – பாறை உறுதியானது. அந்தப் பாறை போன்று உறுதியுள்ளவனாக நீ இருப்பாய்

என்று உன்னிடத்தில் எதிர்பார்த்தேன். ஆனால், நீயோ என்னை மறுத லித்தாய் . இனி நீ பேதுரு என்றழைக்கப்படுவதற்கு லாயக்கற்றவன் என்று அவனுக்கு உணர்த்தும்படியாகவே, அவனைச் சீமோனே என்றழைத்தார். கண்டிப்பாக மறதி காரணமல்ல.

ஒரு வேளை பேதுரு துக்கப்பட்டிருந்தாலும், தன் வாழ்க்கையில் முன் னெப்போதும் கற்றுக்கொள்ளாத ஒரு முக்கியமான பாடத்தை அங்கே அவன் கற்றுக் கொண்டான். அந்தப் பாடம், “ உண்மையான அன்பு ” பற்றியது. ஆம், பேதுரு இதுவரை இயேசுவின் மீது காட்டாததொரு அன்பு அது. இயேசு பேதுருவுக்கு எடுத்துக்காட்ட முயன்ற இப்படிப்பட்ட அன்பு பற்றி தான், அப்போஸ்தலன் பவுல் 1. கொரி. 13-ம் அதிகாரத்தில் விளக்கியுள் ளார். இந்த அன்பை பேதுரு உணர்ந்த பின், தன் பெலவீனங்கள் எல்லாம் மாறி, கிட்டத்தட்ட ஒரு பூரணத்தை தன் வாழ்க்கையில் பெற்றுக் கொண் டான். உன்னத தேவனுக்குப் பயன்படும் பக்குவமான பாண்டமாக மாறி னான். அவருக்காக தைரியமாகவும், உண்மையாகவும், உறுதியாகவும் ஊழியம் செய்தான்.

அருமையானவர்களே, அப்போஸ்தலன் பேதுரு, புதிய வானமும், புதிய பூமியும் காத்துக்கொண்டிருக்கிறது என்று சொல்லும் நிலையை அடைந்தது. தற்செயலாக ஏற்பட்ட ஒன்றல்ல. அந்த நிலையை அடைவ தற்கு, அவன் கடந்து வந்த பாதை கரடுமுரடானது. பாடுகளும், சோதனை களும், வேதனைகளும் நிறைந்தது. ஆனால், அவை எல்லாவற்றையும் தாண்டி வெற்றி கொண்டான்.

பேதுரு பற்றி வாசிக்கிற அன்பான நண்பரே! சகோதரனே, சகோத ரியே, நாமும் இந்தப் பேதுரு போல், தேவனை நோக்கி, முன்னேறிச் செல்வோம். ஆம், உலகமே பெரிதென்றும், பூமியின் வாழ்க்கைதான் பெரி தென்றும் நினைக்காமல், இயேசுவின் சுவிசேஷத்தைப் பின்பற்றுவோம். குறிப்பாக, நமக்காக வந்த இயேசுவின் சுவிசேஷம் பற்றியும், அவைகூறும் இரட்சிப்பின் திட்டம் பற்றியும், அவர் கட்டின ஒரே சபை பற்றியும் அறிந்து கொள்வோம். அதன்பிறகு, என்ன நேர்ந்தாலும், சொல்லிலும், செயலிலும் அவரை விட்டுப் பின்வாங்காத உறுதித் தன்மையை, நாம் அவர் மீது காட்டும் மெய்யான அன்பின் மூலமாகப் பெற்றுக் கொள்வோம். அப்படிச் செய்வோமானால், பேதுரு போல, நாமும், ‘‘ அவருடைய வாக்குத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும், புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்க முடியும் ”.

அப்படிக் காத்திருக்க தேவன் நம் ஒவ்வொருவருக்கும் இரக்கக் கட்டளையிடுவாராக! ஆமென்!! ●

# ஏன் பரலோகத்திற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது?

Bro. J.C. சோட்

மத உலகில், நாம் பரலோகத்திற்கு அநேக வழிகள் உண்டு என்பது போன்ற வாக்கியங்களை அடிக்கடி கேட்கிறோம். அது மட்டுமல்ல, எல்லோரும் வித்தியாசமான பாதைகளில் பயணிக்கிறோம். ஆனால், நாம் எல்லோருமே ஒரே இடத்திற்குச் செல்ல முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் பேசக் கேட்கிறோம். இப்படிப் பேசப்படுபவைகள் குறித்து நாம் நேரம் எடுத்து சிந்திக்காவிட்டால், அவைகளெல்லாம் சரி தானே என்பதுபோல தோன்றும். ஆனால், நிச்சயமாகவே அது வேதாகம உபதேசத்திற்கு மாறானதாயிருக்கிறது.

வேதாகமம் பரலோகம் பற்றியும், அதன் ஒட்டு மொத்த அழகு பற்றியும், வரவிருக்கின்ற உலகத்தில் கர்த்தருடைய ஜனங்களுக்காக அது எப்படி ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றியும் நேர்த்தியாகச் சொல்கிறது. கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். " உங்கள் இருதயம் கலங்காதிருபதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாச மாயிருங்கள், என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்; நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் " (யோவான் 14 : 1 – 3 ). ஆகவே, இயேசுவை விசுவாசிக்கிற எல்லாரும், நிச்சயமாகவே அங்கே போக விரும்புவார்கள். ஆனால், கேள்வி என்னவென்றால், நாம் எப்படி அங்கே போக முடியும், அங்கே போவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறதா?

இயேசு மறுபடியும், " நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் " என்று சொன்னார் (யோவான் 14 : 6). பிதாவினிடத்தில் செல்வதற்கு வழி, ஒரே வழி இயேசு தான் என்பதை கவனியுங்கள், ஒருவர் பிதாவினிடத்தில் கிறிஸ்துவினால் அல்லது கிறிஸ்து மூலமாக மட்டுமே செல்ல முடியும். பிதாவினிடத்தில் செல்வதற்கு அநேக வழிகள் இருந்தால் கிறிஸ்து

மாத்திரம் ஒரே வழியாக இருக்க முடியாது.

இயேசு தம்மை நல்ல மேய்ப்பனாகவும், கிறிஸ்தவர்களை ஆடுகளாகவும், சபையை ஆட்டுத்தொழுவமாகவும் சித்தரிக்கிறார். இங்கே இயேசு வாசலைப் பற்றி என்ன சொல்கிறார் என்று கேளுங்கள்: **" நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் "** (யோவான் 10 : 7) . இயேசு தொடர்ந்து, நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும், புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான் " என விளக்குகிறார் (யோவான் 10 : 9). இயேசு மறுபடியும், " மெய்யாகவே, மெய் யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன்; ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும், கொள்ளைக்காரனுமாய் இருக்கிறான் " என்றார் (யோவான் 10 : 1). வேறு விதமாய்ச் சொன்னால், இயேசு அந்த ஆட்டுத் தொழுவத்துக்கு வாசல் என்று சொல்கிறார், சபைக்குச் செல்வதற்கு ஒரே வழி என்றும், பரலோகம் செல்வதற்கும் ஒரே வழி தான் என்றும் சொல்கிறார். அவர் அதன் பின்பு ஒருவன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறினால் அவன் கள்ளனாக, கொள்ளைக்காரனாக கருதப்பட வேண்டும் என்று சொல்கிறார். ஆனால், முடிவிலே அப்போஸ் தலனாகிய பவுல், தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படியாவிட்டால் தேவனுடைய ராஜ்யம் அல்லது சபை அல்லது பரலோகத்திற்குள் பிரவேசிக்கக்கூட முடியாது என்கிறார். நிச்சயமாகவே, கர்த்தர் கொடுத்திருக்கிற வழியல்லாமல் வேறு வழியாய் பரலோகம் செல்ல முயற்சி செய்கிறவன் நரகத்தில் தள்ளப்படுவான்.

மற்றுமொரு சூழ்நிலையில் இயேசு தம்மைச் சுற்றிலும் கூடியிருந்த ஜனங்களை நோக்கி இப்படிச் சொன்னார். **" இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள்அநேகர். ஜீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் "** என்றார் ( மத்தேயு 7 : 13, 14 ). நாம் ஒவ்வொருவரும் இடுக்கமான வாசல் வழியாய் பிரவேசிக்க வேண்டும் என்று இயேசு சொல்வதை நாம் கவனிக்க வேண்டும். இந்த இடுக்கமான வாசல் இயேசுவை அடையாளப்படுத்துகிறது.

இயேசுதான் சபைக்குள் பிரவேசிப்பதற்கான வழி. அதன் மூலமாக ஒருவர் பரலோகத்திற்குக் கடந்து செல்கிறார். இயேசு தொடர்ந்து சொல்லும்

போது, இடுக்கமான வாசல் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் தங்களை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் நெருக்கமான வழியைக் கண்டடைகிறார்கள். இந்த விஷயத்தில் ஒரே வாசல், ஒரே வழிதான் இருக்கிறது. அந்த ஒரே வழிதான் பரலோகத்திற்கு அழைத்துச்செல்லும். யார் இந்த வழியில் இருப்பார்கள்? கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள்.

அதன் பின்பு, கிறிஸ்து அடுத்த வழி பற்றி பேசுகிறார். வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிற கேட்டுக்கு அழைத்துச் செல்லும் வழியில் பயணம் செய்பவர்கள் பற்றி. இதில் பயணிக்க யார் துணிவர்? மாம்சசிந்தை உடையவர்கள் மற்றும் தேவபக்தியற்றவர்கள். கிறிஸ்துவின் அதிகாரத்தை ஏற்க மறுத்து, தங்கள் வழியில் பயணிப்பவர்கள். இன்னும் மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைகளில் சேருபவர்கள்; மனிதருடைய பெயர்களை தரித்துக் கொள்பவர்கள், தங்கள் பிரியத்தின்படி ஆராதிப்பவர்கள். இவர்கள் தான் ஏமாற்றப்பட்டவர்கள், மற்றவர்களை ஏமாற்றுபவர்கள். உண்மையில்லாத கிறிஸ்தவனும் இந்தக் கூட்டத்தில் தான் இருப்பான். ஆனால், இந்தப் பாதை அல்லது வழி எங்கே அழைத்துச் செல்கிறது? இது, நித்திய அழிவுக்கு அழைத்துச் செல்கிறது. ஆம், இவர்களில் அநேகர் நேர்மையும், உண்மையுமானவர்களாய் இருப்பார்கள். அவர்கள் எல்லாவற்றிலும் பக்தியுள்ளவர்களாயுமிருப்பார்கள். ஆனால், அவர்கள் விசாலமான வழியில் இருக்கிற காரணத்தால் இழந்து போவார்கள்.

என் நண்பர்களே, ஒரு முக்கிய தலைநகரத்திற்குச் செல்வதற்கு பல வழிகள் இருக்கிறது. ஆனால், உங்களிடம் ஒருவர் ஒரு குறிப்பிட்ட பாதை வழியாக மட்டும் பயணம் செய்ய வேண்டும் என்று ஒப்பந்தம் செய்திருக்கும் நிலையில், நீங்கள் வேறொரு வழியைத் தெரிந்து கொண்டால் என்ன நடக்கும்? நீங்கள் பிரச்சனையில் மாட்டிக்கொள்வீர்கள். அதுபோலவே, கிறிஸ்துவுக்கு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் வல்லமையும் உண்டு (மத்தேயு 28 : 18). அந்த அதிகாரத்திற்கு நாம் மரியாதை கொடுத்து கர்த்தர் கொடுத்திருக்கிற அறிவுரைகளை நாம் பின்பற்றும் போது அதுவும் இதே விதமாகத்தான் இருக்கிறதென்பதைக் காணமுடியும். கர்த்தர் வகுத்துத் தந்திருக்கும் பாதையில் நாம் பயணம் செய்வது அவசியம்.

பரலோகத்திற்குச் செல்லும் வழி பற்றி நாம் பேசுவதில் நமக்கு இருக்கும் பிரச்சனை என்னவென்றால், மனித புரிந்துகொள்ளுதலின் அடிப்படையில் நாம் அதை அணுகுவது. எப்படியெனில், ஒரு பட்டணத் துக்கு அநேக

வழிகள் இருந்து, எல்லா வழிகளுமே ஒருவரை அந்த பட்டணத்துக்கு அழைத்துச் செல்வது உண்மையானால், ஆவிக்குரிய ரீதியிலும் இது உண்மையாகத் தானே இருக்கவேண்டும் என்று. ஆனால், கர்த்தரைப் பொறுத் தவரை, அவருடைய வழியைப் பொறுத்தவரை, ஒன்றே ஒன்று தான் இருக்கிறது. வேறு வழிகள் இருக்கிறது போல் நமக்குத் தெரியலாம், பல மத நம்பிக்கைகள், மனுஷருடைய சபைகள் போன்று வேறு வழிகள் நமக்குத் தெரியலாம். ஆனால், இவைகள் எல்லாம் பரலோகத்திற்கு செல்லும் வழிகள் அல்ல. மனிதனால் உண்டாக்கப்பட்ட வழிகள் மற்றும் அமைப்புகள் மூலமாக யாரும் பரலோகம் செல்ல முடியாது. இதை உணர்ந்து கொள்வதற்கு, நாம் செய்ய வேண்டியதெல்லாம், வேதாகமத்தைத் திறந்து வாசிப்பது தான். கிறிஸ்து இப்படியாகச் சொன்னார் " மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் " என்று (மத்தேயு 15 : 9).

மீண்டும் கிறிஸ்து, " பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத் தின்படி செய்கிறவனே, பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்; அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் " , (மத்தேயு 7 : 21 – 23). இதே மாதிரியான அநேக வாக்கியங்களை வேத வசனங்களில் நாம் காண முடியும். நாம் தேவனுக்கு கீழ்ப்படியாமலிருந்து, காரியங்களை நம் வழியில் செய்து, மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைகளில் சேர்ந்து, மனிதனால் உண்டாக்கப்பட்ட பெயர்களைத் தரித்து, நாம் தெரிந்து கொள்ளுகிறபடி ஆராதித்து, நாம் எந்த வழியில் பயணிக்க விரும்புகிறோமோ அதே வழியில் பயணத்து அதே நேரத்தில் பரலோகம் செல்ல முடியும் என்று நம்மால் நினைக்க முடிகிறதா? ஒருவேளை நாம் அப்படிச் சிந்திக்கத் தலைப்பட்டால், நிச்சயமாக நாம் தவறு செய்கிறவர்களாயிருப்போம். சவுலைப் பாருங்கள். அவர் மிகவும் பக்தியாய் இருந்தார். கர்த்தருடைய சபையை அவர் துன்பப்படுத்தின போதிலும் அவருக்கு நல்மனச்சாட்சி இருந்தது. ஆனால், தான் தவறு செய்ததை அவர் கண்டு கொண்டார். அவர் தன்

பாவங்களிலிருந்து மனந்திரும்ப, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தபோது தான் இரட்சிக்கப்பட்டார் ( அப்போஸ்தல் 9 மற்றும் 22 அதிகாரங்கள்). ஆனால், கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் எப்படி? அவர்கள் நல்லவர்களாக இருந்தார்கள். அவர்கள் தானதர்மங்களைச் செய்து அடிக்கடி பரலோகத்தின் தேவனிடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ஆயினும், பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட பிறகு, அவர்கள் இரட்சிக்கப்படும்படி, ஞானஸ்நானம் பெறக் கட்டளையிடப்பட்டார்கள். ஆயினும், பேதுருவின் பிரங்கத்தைக் கேட்ட பிறகு, அவர்கள் இரட்சிக்கப்படும்படி, ஞானஸ்நானம் பெறக் கட்டளையிடப்பட்டார்கள். அப்போஸ்தலர் 10 ஆம் அதிகாரம் பரலோகம் செல்வதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது என்கிற உண்மைக்கு ஆதரவாக வசனங்களில் அநேக உதாரணங்கள் இருக்கின்றன.

என் நண்பர்களே, இது பற்றி யோசித்துப் பாருங்கள். வேதாகமம் ஒரே தேவனும், ஒரே கர்த்தர் அல்லது ஒரே இரட்சகரும், ஒரே பரிசுத்த ஆவியும், ஒரே சரீரம் அல்லது சபையும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே நம்பிக்கையும் உண்டு என்று போதிக்கிறது ( எபேசியர் 4 : 1 - 6 ). வேதாகமம் ஒரே ஒரு நற்செய்தி அல்லது இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழிதான் இருக்கிறது என்று சொல்கிறது. கர்த்தர் இரட்சகராயிருக்கிறார், ஒவ்வொ ருவரும் இரட்சிக்கப்பட ஒரே விதமாகச் செய்ய வேண்டும் என்று கட்டளை யிட்டிருக்கிறார். எல்லாரும் அவருக்குச் செவிகொடுக்கவும் (மத்தேயு 17 : 5) அவரை விசுவாசிக்கவும் (யோவான் 8 : 24) அவரவர் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும் ( லூக்கா 13 : 3 ) கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடவும் ( மத்தேயு 10 : 32 ) பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவும் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் ( மாற்கு 16 : 16; அப்போஸ்தலர் 2 : 38 ). கிறிஸ்து அதே நற்செய்தி தான் முழு உலகத்திற்கும், சர்வசிருஷ்டிக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார் ( மாற்கு 16 : 15,16 ). கிறிஸ்து இரட்சிக்கப்பட்ட எல்லோரையம் தாம் கட்டின சபையில், எந்த சபைக்காக மரித்தாரோ அந்த சபையில், தன் சுயரத்தத்தினாலே எந்த சபையை வாங்கினாரோ அந்த சபையில், எந்த சபைக்கு அவர் தலையாயிருக்கிறாரோ அந்த சபையில், எந்த சபைக்காக ஒரு நாள் திரும்பி வரப்போகிறாரோ அந்த சபையில் சேர்த்துக் கொள்கிறார் (அப்போஸ்தலர் 2 : 47; மத்தேயு 16 : 16; எபேசியர் 5; அப்போஸ்தலர் 20 : 28 ). தேவன் தம்மை எல்லோரும் ஆவியோடும்,

உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என விரும்புகிறார் (யோவான் 4 : 24 ). ஆகவே, எல்லோரும் வாரத்தின் முதல் நாளிலே கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படியாக தேவனுடைய வார்த்தையைப் படிப்பதற்காக, ஜெபிப்பதற்காக காணிக்கை கொடுக்கும் படியாக, தேவனைத் துதித்துப் பாடும்படியாகக் கூடவேண்டும் (அப். 20 : 7; II தீமோ. 2 : 15; அப். 2 : 45; எபேசியர் 5 : 19 ). தேவன் தம்முடைய ஜனங்க ளெல்லாரும் எல்லாவற்றையும், கிறிஸ்துவின் நாமத்தினாலே செய்ய வேண்டும் என்று விரும்புகிறார் (கொலோசெயர் 3 : 17). அதன் பொருள், எல்லோரும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொள்ளவேண்டும் (அப். 11 : 26) . மற்றும் எல்லாரும் உண்மையுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தை நடத்த வேண்டும் (வெளிப்படுத்தின விசேஷம் 2 : 10) என்பதே.

இப்போது, இதற்கு முன்பு சொல்லப்பட்டவைகளெல்லாம் உண்மையாக இருந்து, நீங்களாகவே வேத வசனங்களை வாசித்து, படித்து, அவைகள் உண்மைதான் என்று நீங்களாகவே பார்க்க முடிந்தால், பரலோகத்திற்கு ஒரு வழிக்கு மேல் எப்படி இருக்க முடியும்? ஆம், பரலோகம் செல்வதற்கு வழி ஒன்று இருக்கிறது, அது கர்த்தருடைய வழியாக இருக்கிறது. பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் வழியில் நாம் பயணம் செய்யும் படி, அந்த வழியை நாம் ஏற்றுக் கொண்டு, கர்த்தர் நம்மை என்ன செய்யும்படியாக சொல்கிறாரோ அதைச் செய்தால் நாம் ஞானமுள்ளவர்களாயிருப்போம். நாம் வேறுவழியாக பரலோகம் செல்லவே முடியாது. ஞானி இப்படியாகச் சொன்னார் மனுஷருக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள் என்று (நீதிமொழிகள் 14 : 12).

எந்தப் பாதையில் நீங்கள் பயணித்துக் கொண்டிருக்கிறீர்கள்? இடுக்கமான வழியிலா? அல்லது விசாலமான வழியிலா? ஒரே நேரத்தில் உங்களால் இரண்டு வழிகளிலும் பயணம் செய்ய முடியாது. எந்த மனிதனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது என்று கிறிஸ்து சொன்னார் (மத்தேயு 6 : 24). நாம் ஒன்று அவரோடிருக்கிறோம் அல்லது அவருக்கு விரோதமாக இருக்கிறோம் என்று இயேசு சொன்னார் (மத்தேயு 12 : 30). ஆகவே, நாம் எந்த வழியில் பயணம் செய்வது எனத் தீர்மானிப்பது நம் கையில் விடப்பட்டிருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவையும், பரலோகத்திற்குச் செல்லும் வழியையும் தெரிந்தெடுக்கும்படியாக நாங்கள் உங்களிடம் மன்றாடுகிறோம். ●

# கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்டுவது

Sis. ரேச்சல் இராஜநாயகம்

மனிதனுடைய தேவைகளை சந்திப்பதற்காக தேவனால் வடிவமைக்கப்பட்ட ஸதாபனம்தான் குடும்பம் என்பது. (ஆதி. 2 : 8 – 25) குடும்பம் தன் காரியத்தில் தவறும் போது சமுதாயம் சீரழிகிறது. இன்றைய சமுதாய மானது, மிகவும் பலவீனமான, பயனற்ற, முறிந்து போன, உடைந்து போன குடும்பங்களை உள்ளடக்கியுள்ளது.

ஆதியிலிருந்தே ஒரு ஆண் ஒரு பெண்ணோடு இணைந்து வாழவேண்டும் என்று தேவன் திட்மிட்டிருந்தார். " அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்தீரி தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப் பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்: புருஷன் மரித்த பின்பு புருஷனைப் பற்றிய பிரமாணத்தினின்று விடுதலை யாயிருக்கிறாள். (ரோம. 7 : 2) வீடு, குடும்பம் ஆகிய இரண்டுமே, பிதா, குமாரன் ஆகிய இருவருக்கும் மிகவும் முக்கியமாகப்பட்டது. " **இப்படியிருக்கிறபடியால் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன் என்றார்** " மத். 19 : 6.

குடும்பத்திற்குள்ளாகத்தான் ஒரு கணவனும், மனைவியும் அன்பைப் பெற்றுக் கொள்கின்றனர். ஒரு கூட்டாளித்தனத்தையும், தங்களைத் தாங்களே திருப்திபடுத்திக்கொள்ளும் தன்மையையும் (1. கொரி. 7 : 2 – 5) பெற்றுக் கொள்கின்றனர். பிள்ளைகளை இந்த உலகிற்கு கொண்டுவரவும், அவர்கள் குடும்பத்தில் அப்பா, அம்மாவுடன் வளரவும் தேவன் விருப்பம் கொண்டிருந்தார். ஆனால், இன்றைக்கு குடும்பங்கள் சாத்தானால் தாக்கப் பட்டு இருக்கிறது. சாத்தானோடு இருக்கும் போராட்டத்தில், நம் குடும் பத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் காரியத்தில் நாம் ஈடுபட வேண்டும்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் என்பது " ஒப்புக்கொடுத்தல் " என்ற கல்லின்

மேல் கட்டப்பட வேண்டும். முதலாவது, கணவனும், மனைவியும் தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும். (1. கொரி. 15 : 1 - 4 ; மாற்கு 16 : 16) அத்தோடு கூட, ஒருவருக்கொருவர் ஒப்புக் கொடுத்து வாழ வேண்டும். ஒரு வல்லமையான கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்ட குடும்பத்தில் ஒவ்வொருவர் நலனுக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல் மிகவும் அவசியம். ஒரு பலமுள்ள குடும்பத்தைக் கட்ட தன்னலமில்லாமல் நீ உன் நேரத்தையும் உன் பலத்தையும், உன் உடமைகளையும் அத்தோடு உன்னையும் ஒப்புக்கொடுக்க வேண்டும். ஒப்புக்கொடுத்தலுக்கு விரோதி சுயநலம்.

தேவனுக்கு தேவன் செய்வதின் மூலம் குடும்பங்கள் கடட்டப்பட வேண்டும். தேவனுடைய சபையின் ஆராதனையில் தவறாமல் பங்கு கொள்வது கிறிஸ்தவக் குடும்பங்களுக்கு மிக அவசியமானது. " சபைகூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறது பொல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபத்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும். ( எபி. 10 : 25 ) ஓர் ஆராதனையையோ,ஒரு வேதபாட வகுப்பையோ அசட்டை செய்து கலந்து கொள்ளாமல் இருப்பது, கிறிஸ்தவம் அவ்வளவு முக்கியமல்ல என்பதை உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வழிவகுத்துவிடும். ஒரு குடும்பத்தைக் கட்டுவதற்கு ஜெபமும், வேத வாசிப்பும் முக்கியப் பங்கை வகிக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், தேவன் 1. நித்தியமானவர் ( சங். 90 : 2 ) 2. எல்லாம் வல்லவர் ( ஆதி. 1 : 3 ), 3. நல்லவர் (யாக். 1 : 17), 4. பரிசுத்தமுள்ளவர் (1. பேதுரு 1 : 16), 5. எங்கும் வியாபித்துள்ளவர் ( சங். 139 ) முதல் முதலாக குடும்பத்தை ஸ்தாபித்த அந்த நித்திய தேவனை ஆராதிக்காமல் ஒரு மகிழ்ச்சியுள்ள, பலமுள்ள, வெற்றியுள்ள குடும்பங்களைக் கட்டவே முடியாது.

ஒருவரையொருவர் " மெச்சிக்கொள்ளுதல் " என்ற கல்லின்மீது கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்டவேண்டும். மனிதகுலம் எதிர்பார்க்குதலில் மிகவும் தலையானது பிறரிடம் மெச்சுதலைப் பெற்றுக் கொள்வது. கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகிய அனைவருக்கும் இந்த எதிர்பார்ப்பு பொதுவானது. நம்முடைய இலட்சியமே, நம்மைச் சார்ந்த வர்கள், குழந்தைகள், பெற்றோர் இவர்களை பாராட்டுவதாக இருக்க வேண்டும். " ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்பு கிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே

நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம். ( மத். 7 : 12 ) மற்றவர்களை பாராட்டுதல் என்பதை எளிமையாக இந்த தங்கச் சட்டத்தைப் படித்து செயல்படுத்துவதாகும். இது செய்யப்படவும் வேண்டும்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் அன்பினால் கட்டப்பட வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பத்திலும் முக்கியமாகக் காணப்படவேண்டியது இந்த அன்பு என்பதுதான். “ ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபே. 4 : 32) “ மன உருக்கம் ” என்பது முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது. யாதொருவர் சாந்தம், அமைதி, பாதுகாப்பு, புரிந்து கொள்ளுதல் ஆகிய குணங்களுடன் இருந்தால் அவர்கள் தங்கள் குடும்பத்தை நன்றாகக் கட்டுவார்கள். புருஷர்கள் குறிப்பாக முரட்டுக் குணத்தைத் தவிர்க்க வேண்டும். “ புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள். அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள் ” (கொலோ. 3 : 19) “ இரக்கம் ” “ மனதுருக்கம் ” ஆகிய இரண்டு குணங்களும் குடும்பத்தை பலமாகக் கட்டத் தேவைப்படுபவைகளாகும்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் கட்டாயமாக 1. ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருக்க பழகிக்கொள்ள வேண்டும். 2. ஒருவர் பேச்சுக்கு ஒருவர் மரியாதை கொடுக்க வேண்டும். 3. ஒருவரில் ஒருவர் அன்பு கூர வேண்டும். 4. எல்லோரும் ஒன்றாக சேர்ந்து இருப்பதில் அதிக நேரத்தை செலவு செய்யவேண்டும். 5. குடும்பத்திற்காகவும், தேவனுக்காகவும் வல்லமையாக ஒவ்வொருவரும் ஒப்புக்கொடுக்க வேண்டும். 6. அன்பாகவும், மனதுருக்கமாயும் இருக்க வேண்டும். 7. ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும். 8. ஒருவரையொருவர் மெச்சிக் கொள்ள வேண்டும் 9. ஒருவர் சொல்வதை மற்றவர் கவனிக்க வேண்டும் 10. மற்ற குடும்பங்கள் பரலோகம் செல்ல உதவி செய்ய வேண்டும்.

வல்லமையான குடும்பங்களால்
வல்லமையான சபைகளைக் கட்ட முடியும்.

## ராஜ்யத்தின் குணாதிசயங்கள்

1. தேவனுடைய ராஜ்யம் தெய்வீக ஆரம்பத்தைக் கொண்டது;
   அது ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை ( தானியேல் 2 : 44 )
2. இது ஓர் உலகளாவிய அமைப்பாகும் ; இதற்கு தேசிய எல்லையோ
   அல்லது சர்வதேச எல்லையோ கிடையாது ( மாற்கு 16 : 15 ; மத்தேயு 28 : 19 )

வாலிபர் பகுதி

# உற்சாகத்திற்கு உலை

Bro. பென்னி மார்ட்டின்

**பி**ரியமான வாலிபர்களே! உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக மறு படியும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். பல நேரங்களில் கிறிஸ்துவுக்காக நாம் அதைச் செய்ய வேண்டும், இதைச்செய்ய வேண்டும் என்று உற்சாக மிகுதியால் உரக்கச் சொல்கிறோம். ஆனால், சில மணி நேரங்களிலேயே அவ்வார்த்தைகள் காற்றில் கரைந்து போகின்றன. உலகக் கவலைகள், குடும்ப அழுத்தங்கள் மற்றும் பல பொருளாதாரப் பிரச்சனைகள் நம் உற்சாகத்தை நிலைகுலையச் செய்துவிடுகின்றன. ஆனால், இச்சாக்குப் போக்குகளை தேவன் ஏற்றுக்கொள்வாரா? இல்லை, நிச்சயமாகவே ஏற்றுக் கொள்ளமாட்டார். பல வாலிபர்கள், சினிமா, விளையாட்டு, போன்ற காரியங்களில் உத்வேகத்துடன் ஈடுபடுகிறார்கள். ஆனால், ஆவிக்குரிய காரியங்கள் என்று வரும்போது உற்சாகமற்றுக் காணப்படுவதை நம்மால் காணமுடிகிறது. தேவனுக்காக நாம் செய்ய வேண்டிய காரியங்களை உற்சாகமாச் செய்ய விடாமல் தடுக்கும் காரணிகளை நாம் இனி கவனிப்போம்.

### I தேவன் நம்மோடு இருக்கிறார் என்பதை மறந்துவிடும் போக்கு

தேவன் தமது பலத்த கரங்களினாலே எகிப்தின் அடிமைத்தனத் திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்து வனாந்திர மார்க்கமாய் கானான் தேசத்தை நோக்கி வழிநடத்தினபோது, அவர்கள் கானான் தேசம் எப்படிப்பட்டது என்பதை வேவு பார்ப்பதற்காக பன்னிரெண்டு பேரை அனுப்பினார்கள். அதில் யோசுவா, காலேப் மட்டும் அத்தேசத்தைத் தங்களால் சுதந்தரித்துக் கொள்ள முடியும் என்கிற நற்செய்தியைக் கொண்டு வந்தார்கள். இவர்கள் இருவரும் தேவனிடத்தில் பக்திவைராக்கியமாயிருந்தார்கள். கானான் தேசத்தை வேவுபார்க்கப் போன மற்ற பத்து பேருக்கும், இவ்விருவர்களுக்குமிடையே இருந்த ஒரே

வித்தியாசம் தேவனுக்கான பக்திவைராக்கியம்தான். மற்ற பத்துபேரும் தேவன் எவ்வளவு பெரியவர் என்று பார்ப்பதை விட்டுவிட்டு தங்கள் சத்துருக்கள் எவ்வளவு பெரியவர்கள் என்பதைப் பார்த்தார்கள். நம் கவனம் தேவன் எவ்வளவு பெரியவரிலிருந்து, நம் பிரச்சனைகள் எவ்வளவு பெரியது என்பதற்கு திரும்பினால் தேவன் மீதான நம் உற்சாகம் குன்றிப் போய்விடும். தேவனுடைய காரியங்களில் நம் உற்சாகத்தை அதிகப்படுத்த தேவனுடைய வல்லமையை நினைவில் கொள்ள வேண்டும். (ரோமர் 1 : 16) நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு இருப்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். (மத்தேயு 28 : 20).

## II தேவனை விட மனிதனுக்கு அதிகம் பயப்படும் போக்கு

இஸ்ரவேல் ஜனங்கள் தேவன் எகிப்துக்குச் செய்ததை நினைத்துப் பார்க்கத் தவறினார்கள். அவர்கள் தேவனுக்குப் பயப்படுவதை விட கானான் தேசத்திலிருந்த சத்துருக்களுக்கு அதிகமாகப் பயந்தார்கள். நாமும் கூட பல நேரங்களில் நம் பெற்றோர்களுக்கு, நம் முதலாளிகளுக்கு, தேவனைவிட அதிகமாகப் பயப்படுகிறோம். அதன் விளைவு தலைக்குனிவு தான். நாம் மனிதர்களுக்கு பயப்படும்போது தேவனுக்காக உற்சாகமாக செயல்பட முடியாது. வேத வசனங்களில் நாம் பார்க்கும்போது, சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம் என்றும், தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள். எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே என்றும் விவரிக்கப்பட்டிருக்கிறது. (மத்தேயு 10 : 28 ; பிரசங்கி 12 : 13) பிரியமானவர்களே, மனித பயம் நாம் தேவனுக்கடுத்த காரியங்களில் உற்சாகமாக ஈடுபடத் தடையாயிருக்க ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. இன்றைய நாட்களில் பெரும்பாலான வாலிபர்கள் தேவபயமில்லாமல் தாறுமாறான வாழ்க்கை வாழ்கிறார்கள். நாம் அவர்களிடம் போய் நீதி, நியாயம், நியாயத்தீர்ப்பு என்று பேசினால் அவர்கள் நம்மை வேற்றுக் கிரக வாசிகளைப்போல் பார்த்து ஏளனம் செய்கிறார்கள். இவ்வுலகத்தில் நடந்து கொண்டிருக்கும் அல்லது அரங்கேற்றப்படும் அநீதிகளுக்கெல்லாம் காரணம் தேவபயமில்லாமை தான். நாம் தேவனைப் பற்றும் பயத்தோடு இவ்வுலகில் வாழ்ந்தால் சந்தோஷமும், சமாதானமும் உண்டாகும், நம் ஆயுள் நாட்களும் பெருகும்.

## III தேவனுடைய கடந்த கால ஆசீர்வாதங்களை மறக்கும் மனப்போக்கு

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்தபோது

தேவன் எப்படித் தம்முடைய பலத்த கரத்தினால் அவர்களை விடுவித்து போஷித்து, அவர்கள் தங்கள் சத்துருக்களை மேற்கொள்ளும்படி செய்தார் என்பதையெல்லாம் மறந்து விட்டார்கள். அதுதான் அவர்கள் தேவனுக்கடுத்த காரியங்களில் உற்சாகமில்லாமல் இருப்பதற்குக் காரணமாயிருந்தது. நம்முடைய உற்சாகமின்மைக்கும் இதுவே காரணமாக அமைகிறது. நமக்கு நடக்கும் நன்மைகள் எல்லாவற்றிற்கும் ஆதாரம் தேவன்தான். நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது (யாக்கோபு 1 : 7) நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் நன்மைகள் ஏராளம் ஏராளம். ஆனால், அந்த நன்மைகளுக்கு பாத்திரமாக நாம் நடந்து கொள்ளுகிறோமா? உலகப்பிரகாரமாக நாம் பார்த்தால் கூட அரசாங்கத்திடமிருந்து நன்மைகள் பெறும் பயனாளிகள் சில தகுதியம்சங்களுக்கு உட்பட வேண்டியதாயிருக்கிறது.

அரசு விதிக்கும் அந்த தகுதியம்சங்களுக்கு ஒருவர் உட்படும்போது மட்டுமே அந்த நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். தேவனுடைய நன்மையான ஈவுகளை நாம் நினைத்துப் பார்த்து, அவருக்கடுத்த காரியங்களில் நாம் உற்சாகமாக செயல்படவில்லையென்றால் நாம் நன்றி கெட்டவர்களாயிருப்போம். இந்த நன்றி கெட்ட இஸ்ரவேல் ஜனங்கள் பாலும் தேனும், ஓடுகிற கானான் தேசத்தை நோக்கி தேவனால் வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது எளிதில் அவர்கள் புசித்த ஆகாரத்தை நினைத்துப் பார்த்தார்கள். ஆனால், ஆளோட்டிகளால் அடக்கப்பட்டதை, அடிக்கப்பட்டதை மறந்து போனார்கள். நாமும் கூட இவ்வுலகம் தரும் அந்த சந்தோஷத்திற்காக தேவன் தரும் நித்திய ஜீவனை இழந்து போகிறோம். நாம் அப்படிச் செய்யலாகாது.

அருமையான வாலிபர்களே! நீங்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்யப் பக்தி வைராக்கியமாயிருந்து ராஜ்யத்தின் விரிவாக்கப் பணியில் உற்சாகத்துடன் இருக்கிறீர்களா? தேவன் நம் சத்துருக்களோடல்ல நம்மோடுதான் இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் மனித பயத்தை உதறித்தள்ளிவிட்டு தேவபயத்தோடு செயல்படுவோம். தேவன் நமக்கு கடந்த காலங்களில் செய்த நன்மைகளை நினைத்து அதற்கு நன்றியாயிருக்க வேண்டும். பிசாசு நம் உற்சாகத்திற்கு உலை வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு நம் பாதையில் பல தடைகளைக் கொண்டு வருவான். நாம் அத்தடைகளைத் தகர்த்தெறிந்து தேவ காரியங்களில் நம்மை முழுமையாக ஈடுபடுத்துவோம். தேவன் தாமே உங்கள் யாவரையும் அபரிதமாக ஆசீர்வதிப்பாராக ! ஆமென்.

சிறுவர் பகுதி

# நன்றி செலுத்துதல்

Bro. ஏபில் நாயகம்

பிரியமான பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் சுகமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். இந்த சிறுவர் பகுதியின் மூலம் வெளிவரும் பாடங்கள் அனைத்தும் உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன். பிள்ளைகளே! நம்மை தேவன் ஒவ்வொரு நாளும் நினைத்துப் பார்த்து ஆசீர்வாதங்களைத் தருகிறார். அவரிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் நாம் அவருக்கு நன்றி செலுத்துகிறவர்களாயிருக்கிறோமா? தேவன் நாம் நன்றி செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கிறாரா? வாருங்கள் கற்றுக் கொள்ளலாம்.

லூக். 17 : 11 – 9 ல் **பத்து குஷ்டரோகிகள்** பற்றி ஒரு சம்பவம் இருக்கிறது. இயேசு கிறிஸ்து நன்மை செய்கிறவராக ஊழியம் செய்து கொண்டிருந்த நாட்களில், ஒருநாள் சமாரியா கலிலேயா என்னும் நாடுகளின் வழியாக நடந்து போனார். அதை அறிந்து பத்து குஷ்டரோகிகள் அவரிடம், தங்களை குணமாக்கும்படி சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அவர்களின் நிலைமையைப் பார்த்து, மனமிரங்கி அந்தப் பத்து குஷ்டரோகிகளையும் சுகமாக்கினார். அந்நாட்களில், இது ஒரு பெரிய அற்புதம்.

வச 15 ல் “ அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பி வந்து, உரத்த சத்தத்தோடே **தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான்** ’’ இங்கே, பாருங்கள், சுகம் பெற்ற பத்து குஷ்டரோகிகளில் ஒருவன் மட்டுமே திரும்ப இயேசுவிடம் வந்து நன்றி சொன்னான்.

அப்பொழுது இயேசு அந்த

ஒருவனைப் பார்த்து, வச. 17 – ல் “ சுத்தமானவர்கள் பத்துபேர் அல்லவா ? **மற்ற ஒன்பது பேர் எங்கே?** ” என்று கேட்டார். ஆம் ! அவர்கள் பெற்றுக் கொண்ட இவ்வளவு பெரிய நன்மைக்காக அவர்கள் ஏன் நன்றி செலுத்தி ஸ்தோத்திரம் செலுத்தவில்லை என்று கேட்டார் !

அன்பு குழந்தைகளே! பத்து குஷ்டரோகிகள் பெற்றுக் கொண்ட நன்மையைப்போல, நாமும் நம் வாழ்வில் தேவனால் ஏராளமான நன்மைகளைப் பெற்றிருக் கிறோம். ஆம், நல்ல பெற்றோர், நல்ல கல்வி, நல்ல சபை, நல்ல நண்பர்கள், நல்ல வீடு, நல்ல உடை, நல்ல உணவு என்று பலவிதமான நன்மைகளைப் பெற்றிருக்கிறோம். உலகில் எத்தனை பேர் இப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் இல்லாமல் இருக்கிறார்கள் தெரியுமா? பாவம், அவர்கள். ஆயினும், இப்படி ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட நம்மில் எத்தனை பேர், தேவன் கொடுத்த வைகளுக்காக நன்றியுள்ள வர்களாக உள்ளோம்? அந்த குஷ்டரோ கிகளிடம் நன்றியை எதிர்பார்த்த தேவன், நம்மிடமும் எதிர்பார்ப்பார் தானே?

அப்படியானால், நாம் தினந்தோறும் தேவனை நோக்கி ஜெபிக்கிறவர்களாக இருந்து, இயேசுவின் மூலம், நன்றி, நன்றி என்று ஒவ்வொரு ஆசீர்வாதத் துக்காகவும் சொல்லுகிறோமா? இனிமேலாவது சொல்லுவோம்.

சிறு பிள்ளைகளாகிய நாம் நன்றி சொன்னால், தேவன் மிகவும் மகிழ்ச்சி அடைவார். நம்மில் அதிகம் பிரியம் வைப்பார். அப்படியே நம்மை காத்துக் கொண்டு, நம்மை அளவில்லாமல் தொடர்ந்து ஆசிர்வதிப்பார். சரியா? ●

## ஆவிக்குரிய மனிதர்

1. விழுந்துபோன சகோதரனை சீர்பொருந்தச் செய்ய நாடுகிறார் ( கலாத்தியர் 6 : 1 )
2. மற்றவர்கள் பாரத்தை சுமக்க நாடுகிறார் ( கலாத்தியர் 6 : 8 )
3. தன்னை ஒருபோதும் ஒரு பொருட்டென்று எண்ணமாட்டார் ( கலாத்தியர் 6 : 3 )
4. தனக்கு உபதேசிக்கிறவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறார் ( கலாத்தியர் 6 : 6 )
5. விதைத்தல் அறுத்தல் விதியை நன்றாகப் புரிந்து கொள்கிறார் ( கலாத்தியர் 6 : 7, 8 )

# பூமியிலே பேசினவரும், பரலோகத்திலிருந்து பேசுகிறவரும்!

Bro. பாண்டியன்

**அ**ன்பான தேவ பிள்ளைகளுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகளும், சமாதானமும் உண்டாவதாக! நம் கட்டுரையின் தலைப்பு எபிரெயர் 12 : 25 ன் வசன அடிப்படையிலானது. எபிரெய புத்தகம் ரட்சிக்கப் பட்டு சபையில் சேர்ந்துள்ள யூத ஜனங்கள் அல்லது எபிரெயு மொழி பேசும் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டுள்ளது. பொதுவாக, யூதர்கள் தேவன் மீது வைராக்கியம் கொண்டவர்களாய் இருந்தும், அவருடைய குமாரன் இயேசுக் கிறிஸ்து என்பதை ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டினார்கள். அதற்கு முக்கிய காரணம் பத்துக்கட்டளைகளில் முதன்மையானதான – " உன் தேவனாகிய கர்த்தர் நானே, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் " என்பதாகும். ஆனாலும், அதே நியாயப்பிரமாண புஸ்தகத்தில் **" அவள் வித்து "** என்பதில் தொடங்கி நூற்றுக் கணக்கான தீர்க்கதரிசனங்கள் இயேசுவைப் பற்றிப் பேசியும் யூதர்கள் அதை விளங்கிக் கொள்ளவில்லை. ஆக, எபிரெயப் புத்தகத்தின் அடிப்படை நோக்கம் " இயேசுக் கிறிஸ்துவுக்கே நாம் செவி கொடுக்க வேண்டும் " என்பதாகும்.

எபிரெயர் 12 ம் அதிகாரத்தில் வசனம் 22 லிருந்து 24 வரை புதிய ஏற்பாட்டு கிறிஸ்துவின் சபைக்கும், பழைய ஏற்பாட்டின் இஸ்ரயேல் சபை யாருக்கும் உள்ள வித்தியாசங்களை நன்கு பட்டியலிட்டுக் காண்பிக் கின்றது. தொடர்ந்து எழுதும் போதுதான் எபிரெயருக்கு எழுதின. ஆசிரியர் பூமியில் பேசினவர் மற்றும் பரலோகத்திலிருந்து பேசுகிறவர் பற்றிக் குறிப்பிடுகிறார். நாம் அறிந்தபடி பழைய ஏற்பாடு முடிவுற்று தற்போது புதிய ஏற்பாடு அமுலில், அதாவது நடைமுறையில் இருப்பதால் – பூமியில் பேசியவர் என்பதை பழைய உடன்படிக்கையை தேவனிடமிருந்து பெற்றுத் தந்த மோசேயையும், பரலோகத்திலிருந்து பேசுகிறவர் என்பது இயேசு ஆண்டவரையும் குறிப்பதாக உள்ளது. பேசினவர் என்ற வார்த்தை கடந்த காலத்தையும் (மோசே ) பேசுகிறவர் என்பது நிகழ்காலத்தையும் (கிறிஸ்து) குறிப்பிட்டுக் காண்பிப்பதை கவனியுங்கள்! அதனால் தான் புத்தகத் தின்ஆரம்ப வசனமே பழைய காலங்களில் தீர்கத்தரிசிகள் மூலமாக, சிறிது சிறிதாக வெளிப்படுத்திய தேவன் இந்தக் கடைசி நாட்களில் குமாரன்

மூலமாக சகலத்தையும் பூரணமாக வெளிப்படுத்தியிருப்பதாக ஆரம்பிக்கின்றது. எனவே, தேவனை நம்புகிறவர்கள் யாராக இருந்தாலும் தற்போது அவருடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவின் உபதேசத்திற்குச் செவி கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் தண்டனை நிச்சயம் உண்டு என்பதே இந்த வசனத்தின் சாரம்சமாகும்.

தேவனை மட்டும் விசுவாசிக்கிற எபிரெயர் ஏன் இயேசுக் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய அல்லது செவி கொடுக்க வேண்டும் என்பதற்கு அநேகக் காரணங்கள் இப்புத்தகத்தின் நெடுக விளக்கப்படுகிறது. அவர்கள் நம்புகிற தேவதூதர்களை விட இயேசு மேலானவர். இவருக்கு தூதர்கள் பணிவிடை செய்தனர். அதேபோல் பழைய உடன் படிக்கையைப் பெற்றுத்தந்த மோசே தேவனுடைய வீட்டில் உண்மையுள்ள வேலைக்காரனாகவும் ஆண்டவராகிய இயேசுவோ தேவனுடைய குமாரனாகவும் இருப்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றது. பழைய உடன்படிக்கையில் ஜனங்களுக்காக பலி செலுத்திய பிரதான ஆசிரியர்களை விட விசேஷித்த ஆணையின் படியாக மகாபிரதான ஆசாரியராக இயேசு இருப்பதையும் இப்புத்தகம் வலியுறுத்துகிறது. அதுமாத்திரமல்ல, புதிய உடன்படிக்கையை பெற்றுத் தந்த மத்தியஸ்தராக இயேசு இருக்கிறார். ஆராதனை முறைமையில் பின்பற்றப்பட்டு வந்த காளை, வெள்ளாட்டுக்கடா போன்ற மிருக பலிகள் வருஷந்தோரும் செலுத்தப்பட்டு வந்த போது, கிறிஸ்து ஒரே தரமாக பலியிடப்பட்டு சொந்த ரத்தத்தினாலே மீட்பை உண்டாக்கியதால் – புதிதும். ஜீவனுமான மார்க்கத்தை இயேசுவின் மாம்சத்தால் உண்டு பண்ணியிருக்கிறார். (எபி. 10 : 19 ) ஆக, இயேசுவே ஆண்டவரும், நீங்கள் நம்புகிற தேவனுடைய குமாரனுமாய் இருப்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லையெனில் தண்டிக்கப்படுவீர்கள் என்பதே எபிரெயர் 12 : 25 ம் வசனத்தின் வெளிப்பாடாக இருக்கிறது.

தொடர்ந்து நாம் கவனிக்கும் போது, பூமியில் பேசினவருக்கு செவி கொடாதவர்கள் தண்டிக்கப்பட்டதைப் போலவே, தற்போது ( சபையில் ) பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டு விலகினால் எப்படித் தப்பிப் போவோம், கண்டிப்பாக தண்டிக்கப்படுவோம் என்பதே இவ்வசனத்தின் எச்சரிப்பாக இருக்கின்றது. மோசேயின் பிரமாணத்தை இஸ்ரயேல் ஜனங்கள் மீறி விக்கிரக ஆராதனை செய்தபோது எதிரிகளால் அழிவை சந்தித்தார்கள். மேலும், ஒட்டு மொத்த ஜனத்தின் 70 வருட பாபிலோனிய அடிமைத்தனம் அவர்களுடைய விக்கிரக ஆராதனையின் விளைவுதான் என்பதை எரேமியா தீர்க்கன் பதிவு செய்துள்ளானர். (எரேமியா 25 : 6 – 11) மேலும், தலைப்பு வசனத்தில் நாம் காணும் இன்னுமொரு வார்த்தையை

கவனிப்போம். பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் என்று காண்கிறோம். எபிரேயர் புத்தகத்தில் விசேஷமாக மூன்று விட்டு விலகல்களை நாம் கவனிக்கிறோம்.

அதில் முதலாவது : எபி 3 : 12 ல் – ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கு ஏதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் – என்கிறது ! இதில் தேவனை விட்டு விலகக் காரணம் **பாவத்தின் வஞ்சனை** என்று அடுத்த வசனம் குறிப்பிடுகிறது. ஏற்கனவே அந்த ஜனங்கள் தேவனை அறிந்தும் செய்த தவறுகளையும், பாவங்களையும் இயேசுவானவர் சுட்டிக் காட்டியதை நாம் நினைவு கூரலாம். கொலை செய்யக் கூடாது என்பது அவர்களின் சட்டம். ஆனால் நியாயமில்லாமல் கோபிப்பதை இயேசு அதற்கு நிகரானது என்று கண்டித்தார். காணிக்கை செலுத்தியும் உன் சகோதரனோடு ஒப்புரவாகமல் இருப்பது, விபச்சாரம் சரீரப்பிரகாரமாக செய்யாவிட்டாலும் ஒரு பெண்ணை தப்பான கண்ணோட்டத்தோடு பார்ப்பது, அற்பமான காரணங்களுக்காக விவாகரத்து செய்வது, கர்த்தர் பேரில் ஆணையிடுவது, பதிலுக்கு பதில் செய்வது, சத்துருவை பகைப்பது போன்ற காரியங்கள் கிறிஸ்துவினால் கண்டிக்கப்பட்டது. இதற்கு நாமும் செவிகொடாவிட்டால் தண்டிக்கப்படுவோம் என்பதே எச்சரிப்பு.

இரண்டாவது ; – எபி 6 : 6 – தேவனுடைய வார்த்தையை மறுதலித்துப் போனவர்கள் ; தேவனுடைய குமாரனை சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துவதால் அவர்களை குணமாக்கமுடியாது." என்கிறது இன்று பழைய ஏற்பாடு போல இடிமுழக்கம், மந்தாரம், பலத்த சத்தம் போன்ற இயற்கை சீற்றத்தினால் தேவன் தமது கோபத்தை, அல்லது தமது வல்லமையை வெளிப்படுத்தாமல் அவருடைய வார்த்தைகள் மூலமாகவே நாம் மனந்திரும்பி வாழவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். எபி 4 : 11 , 12 ன் படி தேவனுடைய வார்த்தை நம் இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாய் இருப்பதால் நாம் விழுந்து போகதபடிக்கு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்று எச்சரிக்கின்றது. ஆகவே, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இருக்கின்ற நாம் தேவனுக்கு செலுத்த வேண்டிய அதே கனத்தையும் மகிமையையும் அவருடைய வார்த்தைக்கும் கொடுக்க வேண்டும். திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான் என்றும், என் வார்த்தைகளைக் கேட்டு அதின்படி செய்கிறவனே புத்தியுள்ள மனுஷன் என்று சொன்ன இயேசுவின் வார்த்தைகளையும் நாம் அறிந்திருக்கின்றோம். அதைவிட்டு விலகினவர்களை மறுபடியும் புதுப்பிக்க

முடியாது என்று காண்கிறோம். அதே நேரத்தில் நம் செயல்கள் / மற்றும் பேச்சுகளால் மற்றவர்களுக்கு இடறலை உண்டாக்காமல் இருப்பதும் நமது கடமையாகும்.

மூன்றாவது : எபி. 10 : 25ல் சபை கூடி வருதலை விட்டு விடுகிறது பற்றி காண்கிறோம். நம் தலைப்பு வசனத்தின் மேற்பகுதி புதிய ஏற்பாட்டில் சபை மற்றும் பழைய ஏற்பாட்டு சபையை ஒப்பிட்டு பேசுகிறதைக் காண்கின்றோம். பழைய ஏற்பாடு சீனாய் மலையருகே கூடினதை புதிய ஏற்பாடு சீயோன் மலைப் பற்றியும், அவர்கள் பூமியின் எருசலேமில் ஆலயம் கட்டினதை – நாம் பரம எருசலேமிடம் அதாவது நேரிடையாக பரலோக தேவனிடம் ஆராதிப்பதையும், பழைய ஏற்பாட்டில் தனித்தனியாக தூதர்கள் வந்து போனதுபோல் அல்லாமல் நம் ஆராதனையில் ஆயிரமாயிரம் தூதர்களோடு நாமும் பங்கு பெறுவதையும், பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் கோத்திரத்தாரின் பெயர்கள் ஆசாரியனின் மார்பகத்தில் பொறிக்கப்பட்டு இருந்தது. ஆனால் நாம் இருப்பது ? – **பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேரானவர்களின் சர்வ சங்கமாகிய சபையில் சேர்ந்திருக்கிறோம். ( எபி 12 : 22 - 24 )** எனவே, இப்படிப்பட்ட மேன்மையான இடத்தை – சபை கூடுதலை விட்டு விடாமலிருப்போம். இல்லையெனில், எபி 10 : 28 , 29 ன்படி மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் சாகிறான். –––– கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவனாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள். ஆகவே, சபை கூடி தேவனை மகிமைப்படுத்துவதில் குறைவில்லாமல் நடந்து கொள்வோம். தேவ ஆசீர்வாதம் நம்மனைவரோடுங்கூட இருப்பதாக. ●

---

## நாளும், நடப்பும்

1. அணைப் பாதுகாப்பு மசோதாவை செயல்படுத்தக்கூடாது – தமிழக அரசு.
2. ஓணம், பக்ரீத் பண்டிகைகளினால் காலாண்டு தேர்வுகள் ஒத்திவைப்பு.
3. வெலிங்டன் ராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிக்கு அங்கீகாரக் கொடி.
4. நீதிபதிகள் நியமனம் ராணுவம் வியூகமல்ல – முன்னாள் நீதிபதி தாமஸ்
5. பாராலிம்பிக்கில் தங்கம் வென்று தமிழக வீரர் சாதனை.
6. அமெரிக்கா ஓபன் டென்னிஸ்: ஏஞ்சலிக் கெர்பர், சாம்பியன்.

# தேவனை மகிமைப்படுத்துவோம் வாருங்கள்

Roy. H. Laxier

இழந்து போனதை தேடி வந்த இறைமகன் இயேசு தமது இனத்தாரான யூதர்களுக்கு மறுமொழி கூறுகையில் " ..... என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன். நீங்கள் என்னைக் கனவீனம்பண்ணுகிறீர்கள். நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை. அதை தேடி நியாயந்தீர்க் கிறவர் ஒருவர் இருக்கிறார் " என்றார் (யோவான் 8 : 49 ,50)

மனித கண்களால் பார்க்க முடியாத மாசற்ற தேவனை இவ்வுலகிற்கு காண்பிக்கவே வந்தார். மாறாத தேவனின் ஒரே மைந்தன் இயேசு அவரு டைய மகிமையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமுமா யிருக்கிறார். (எபி 1: 3) இந்த பூமியில் அவர் இருந்த காலத்தில் எல்லா வகை யிலும் அவரை கனம் பண்ணவும். அவரையே மகிமைப் படுத்தவும் செய் தார். தன்னலமில்லா தமையனாயிருந்ததாலே தனக்கென்று மகிமையை தேடவில்லை. அப்படித் தேடியிருந்தால் " தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலாயிருக்கமாட்டார் " (பிலி 2 : 7) தம்மைத்தாமே தாழ்த்தி கோர பயங்கரமான சிலுவையின் மரணத்தை ருசிபார்த்திருக்க வேண்டிய வேறொரு காரணமுமில்லை. சிலுவையில் மரிக்கும் நபரை சிலுவை மகிமைப் படுத்தாது. மாறாக, அது சாபப்படுத்தும் (உபா 21 : 23): அது ஒரு நபரின் அடிப்படை குணத்தை வெளிப்படுத்தும். ஆனால், பாவம் அறியாத புண்ணியர் இயேசுவோ ஸ்தீரிகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்ட மரியாளிடம் தூய ஆவியானவரால் பிறந்து இப்படி கொடிய மரணத்தை ஏற்றுக் கொண்டு தன் மகிமையைத் துறந்து மகிமையைத் தேடுகிற அல்லது அதற்க தகுதியான பிதாவை மகிமைப்படுத் தினார். இயேசு தமது பிதாவின் சித்தத்திற்கு தம்மை ஒப்புக்கொடுத்தார்.

தேவன் ஒருவரே மகிமைக்கு பாத்திரமாயிருப்பதால் அதை அவர் தேடுகிறார். இயேசு அவரை மகிமைப்படுத்துவது தவறென்று எண்ணவில்லை. பரிசுத்த தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்று நமக்கு போதிக்கிறார். நாம் ஏன் அவரை மகிமைப்படுத்தக் கூடாது. தேவன் மகிமையைத் தேடுவதால் அப்படி செய்வதில் நமக்கு வெட்கம் தேவையில்லை. நாம் அவரை மகிமைப்படுத்தும்போது அவரை பிரியப்படுத்துகிறோம். இப்பொழுது நாம் அவரை மகிமைப்படுத்தினால் கிறிஸ்துவின் காலத்தில் அவர் நம்மை மகிமைப்படுத்துவார் (ரோ 8 : 18)

ஆகவே, இப்பொழுதே அவரை எப்பொழுதும் எல்லா வழிகளிலும் மகிமைப்படுத்தத் தீர்மானிப்போம் ! ●

# விசுவாசத்தின் அடிப்படைகள்

Bro. Charlie Dipalma

ஒன்றான மெய் சபையை அடையாளம் கண்டு கொள்வதற்காக புதிய ஏற்பாட்டை விபரமாக ஆராய்ந்து கொண்டிருக்கும்போது, சபைக்கான தேவனுடைய மாதிரியின் ஒரு பகுதி அதனுடைய ஆராதனை என்று நாம் கவனித் தோம். அந்த ஆராதனை ஆவியோடும், உண்மையோடும் இருக்க வேண்டும். ஆவியோடும் என்றால் புதிய ஏற்பாட்டில் தேவனுடைய வார்த் தைக்கேற்ப இருக்க வேண்டும்.

புதிய ஏற்பாட்டு மாதிரியில் இயேசு கட்டளையிட்ட ஒரு காரியம் என்னவென்றால் கிறிஸ்தவர்கள் கர்த்தரின் பந்தியில் பங்குபெற வேண்டும். அப்பமானது அவருடைய சரீரத்தை நினைவுபடுத்துகிறது. அதற்கு அடையாளமாக இருக்கிறது. அதேபோல திராட்சை ரசம் அவருடைய இரத்தத்தை நினைவுபடுத்துகிறது. அதற்கு அடையாளமாக இருக்கிறது. 1 கொரிந்தியர் 11 : 23 – 29 வரை நாம் வாசிக்கும்போது இயேசுவை நினைவு கூரும்படி அப்பத்தைப் புசிக்கிறோம், திராட்சரசம் குடிக்கிறோம். அதுமாத்திரமல்லாமல் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறோம்.

1 கொரிந்தியர் 11 :27 –29 வசனங்களை வாசியுங்கள் இங்கே கர்த்த ருடைய அப்பத்தைப் புசிக்கிற, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிற ஒவ்வொருவரும் தன்னைத்தான் சோதித்தறிய வேண்டும் என்று பார்க்கிறோம் ஏன்? நீங்களும், நானும் கர்த்தருடைய அப்பத்தைப் புசிக்கிறபோதும், அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறபோதும் அவற்றை நாம் அபாத்திரமாய் செய்யவில்லை என்பதை நாம் நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.

அப்படிச் செய்வது உங்களுக்கும், எனக்கும் ஏன் முக்கியமாக இருக் கிறது? தயவு செய்து 27, 28 வசனங்களை மறுபடியும் ஜாக்கிரதையாக கவனியுங்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ அவன் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ள வனாயிருப்பான்! நமக்கு நாமே ஆக்கினைத் தீர்ப்பை வருவித்துக் கொள்ளும்படியாக நாம் புசிக்கிறோம். குடிக்கிறோம். தெளிவாக இது

தேவனுக்கு ஒரு முக்கியமான ஒன்றாகும். ஆகவே, நமக்கும் இது முக்கியமானதாக இருக்க வேண்டும்.

இவைகளை மனதில் கொண்டு உங்களுக்கும் எனக்கும் கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாய் பங்கு பெறுவதென்றால் என்ன என்பதை நிர்ணயிப்பது அவசியமாகும். தேவன் 29 ஆம் வசனத்தில் அதன் அர்த்ததைச் சொல்கிறார். கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாதபோது கர்த்தருடைய பந்தியில் நாம் அபாத்திரமாய்ப் பங்கு பெறுகிறோம். அதாவது, நாம் அப்பம் புசிக்கும்போது இயேசு நமக்காக ஒப்புக்கொடுத்த அவருடைய சரீரத்தையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். நிச்சயமாகவே, நாம் திராட்சரசத்தைக் குடிக்கும் போது இயேசு நம்முடைய பாவமன்னிப்புக்காக சிந்த அனுமதித்த அவருடைய இரத்தத் தையும் நினைத்து கொண்டிருக்க வேண்டும்.

ஆகவே, கர்த்தரின் பந்தியில் பங்கேற்கும்போது, அதாவது, அவரு டைய மரணத்தை நினைவுகூரும்போது அவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் பற்றிய தீவிர சிந்தை உடையவர்களாயிருக்க வேண்டும். அப்படிச் செய்ய நாம் தவறும்போது கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத் தையும் குறித்துக் குற்றமுள்ளவர்களாயிருப்போம். நமக்கு நாமே ஆக்கி னைத் தீர்ப்பை வருவித்துக்கொள்ளும்படியாக புசிக்கவும், குடிக்கவும் செய்வோம்.

### இது இன்னொரு கேள்வியை எழுப்புகிறது

கர்த்தருடைய பந்தி எப்போது அனுசரிக்கப்படவேண்டும்? அப்போஸ் தலருடைய நடபடிகள் 20 : 7 ஐ வாசிக்கும்போது பவுலும் துரோவாவிலுள்ள கிறிஸ்துவின் சபையும் வாரத்தின் முதல் நாள், அதாவது ஞாயிற்றுக்கிழமை அப்பம் பிட்டது என்று பார்க்கிறோம். தெளிவாக, அப்போது அந்த கர்த்த ருடைய சீஷர்கள் தேவனை ஆராதிப்பதற்குத்தான் கூடினார்கள். இது போன்ற வசனப்பகுதிகளில் “ அப்பம் பிட்டார்கள் ” என்ற சொற்றொடர் கர்த்தரின் பந்தியில் பங்குபெறுவதைத்தான் குறிக்கிறது என்பது தெளிவாகிறது. அதைப்பற்றி தேவன் தம்முடைய வசனத்தின் மூலமாக என்ன சொல்கிறார் என்பதை கவனிப்போம்.

1 கொரிந்தியர் 10 : 16 ஐ நாம் வாசிக்கும்போது, நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறது என்பதை எழுதுவதற்கு அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் ஏவினார். மேலும், பவுல் பாத்திரம் (திராட்ச ரசம்) கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறது என்று

பதிவு செய்திருக்கிறார். இவைகளெல்லாம் கர்த்தரின் பந்தியைக் குறிக்கிறது என்பது தெளிவாகிறது.

எனவே, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவனுடைய வசனத்தைப் படிப்பதற்காகவும், கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவதற்காகவும் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை கூடினார்கள். இதை செய்வதற்குத்தான் கிறிஸ்துவிடமிருந்து நமக்கு அதிகாரம் இருக்கிறது! வாரத்தின் ஏதோ ஒரு நாளில் கர்த்தரின் பந்தியை அனுசரிப்பதற்கு நமக்கு அதிகாரம் இல்லை!

அப்போஸ்தலருடைய நடபடிகள் 20 : 16 ஐ வாசியுங்கள். பவுல் கூடுமானால் பெந்தேகொஸ்தே பண்டிகை நாளிலே எருசலேமிலிருக்க வேண்டுமென்று தீவிரப்பட்டதை ஜாக்கிரதையாக கவனியுங்கள்.

அப். 20 : 6 ல் நாம் வாசிக்கும்போது அப்போஸ்தலனாகிய பவுலும் அவரோடிருந்தவர்களும் துரோவாபட்டணத்தில் ஏழுநாட்கள் தங்கியிருந் தார்கள். பவுல் தீவிரமாக எருசலேமுக்கு செல்ல வேண்டியிருந்ததால் அவர் கள் துரோவாவுக்கு திங்கட்கிழமை தான் வந்திருக்க வேண்டும். ஆனால், பவுல் துரோவா பட்டணத்தில் இருந்த கிறிஸதுவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுடன் தேவனை ஆராதிப்பதற்காக ஏழு நாட்கள் காத்திருந்தார்.

அவர்கள் சந்தேகமின்றி ஒவ்வொரு ஞாயிறன்றும் கர்த்தரின் பந்தியை அனுசரிப்பார்கள் என்பதை பவுல் நன்கு அறிந்திருந்தார். இன்றும் தேவன் உங்களிடமிருந்தும் என்னிடமிருந்தும் அதைத்தான் எதிர்பார்க்கிறார்.

1 கொரிந்தியர் 16 : 1 , 2 யை வாசியுங்கள். இது ஆதிக்கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை சபையாக கூடினார்கள் என்பதற்குத் தெளிவான அடையாளமாகும். தேவனை ஆராதிப்பதற்காக அவர்கள் அப்படிச் செய்தார்கள். மேலும், தேவனை ஆராதிக்கும்போது கர்த்தருடைய வேலைக்காக அவர்கள் காணிக்கை எடுத்திருக்கிறார்கள்.

இந்த வசனங்களை வாசிக்கும்போது மதஉலகில் உள்ள நம்முடைய பிரியமான நண்பர்கள் என்ன முடிவுக்கு வருகிறார்கள்? ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காணிக்கை எடுக்க வேண்டும்! அது மதிப்புள்ள ஒரு முடிவு தான்.

அப். 20 : 7 ல் நாம் பார்த்தபடி கர்த்தருடைய பந்தி சம்பந்தமாக இங்கே உபயோகப்படுத்தப்பட்ட மொழிநடையும் நாம் பார்க்கின்ற இந்த வசனத்தின்

மொழிநடையையும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது. ஆயினும் பெரும்பாலான மார்க்க பிரிவினை கூட்டத்தார் கர்த்தரின் பந்தியில் மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது கால்வருடத்திற்கு ஒரு முறையோ தான் பங்கு பெறுகிறார்கள். பிரியமானவர்களே, இது ஒரே மாதிரியாக இல்லை! காணிக்கையானது ஒருவொரு ஞாயிற்றுக்கிழமையும் சேகரிக்கப்பட வேண்டுமென்றால், கர்த்தருடைய பந்தியும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அனுசரிக்கப்படவேண்டும்.

வசனத்தின் இவ்வகையான புரிந்துகொள்ளுதலை சிலர் ஆட்சேபிக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கர்த்தரின் பந்தியில் பங்கேற்க வேண்டும் என்று தேவன் சொல்லவில்லை என்கிறார்கள். அதை நாம் விவரமாக ஆராய்வோம். முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். (ரோமர் 15 : 4)

இதை மனதில் கொண்டு யாத்திராகமம் 20 : 8 ஐ வாசியுங்கள். தேவன் தம்முடைய ஜனங்களிக் ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்கும்படியாகக் கட்டளையிட்டார். ஓய்வு நாள் என்பது ஏழாம் நாள் அதாவது சனிக்கிழமை. பிரியமானவர்களே, தேவன் இஸ்ரவேலர்களிடம் ஒவ்வொரு ஓய்வு நாளையும் பரிசுத்தமாக ஆசரிக்கும்படி சொன்னாரா? அப்படி இல்லை! தேவனுக்கு அதை சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஓய்வு நாள் வரும் போதெல்லாம் அதை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும் என்று இஸ்ரவேலர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். ஒவ்வொரு வாரமும் ஓய்வு நாள் வந்தது. இஸ்ரவேலர்கள் தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாய் இருந்த போது ஒவ்வொரு நாளையும் பரிசுத்தமாக ஆசரித்தார்கள்.

எனவே, தேவன் முன்பு எழுதியிருக்கிறவைகளைக் கொண்டு நீங்களும் நானும் என்ன பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்? தேவனுக்கு கீழ்ப்படியும்படியாகவும், அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கும்படிக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வேண்டும்.தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால் நீங்களும், நானும் வாரந்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும். மாதத்திற்கு ஒருமுறை அல்ல. தினந்தோறும் அல்ல. மேலும் ஞாயிற்றுக்கிழமை அல்லாத வேறொரு கிழமையில் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற நமக்கு எந்த அதிகாரமும் இல்லை.

●

ஆராதனைக்கான தேவனுடைய மாதிரியின் இந்த பங்குக்குப் பொருந்தாத எந்தத சபையும் இயேசு கிறிஸதுவால் ஸ்தாபிக்கப்பட்ட சபை யாகாது என்பதை அன்புடனும், தாழ்மையுடனும் நாம் மக்களுக்கு சொல்ல வேண்டும்! இப்படிப்பட்ட சபைகளில் ஆராதனை செய்யும் எந்த நபரும் இயேசு சொன்னது போல வீணான ஆராதனை செய்கிறார். மத்தேயு (15 : 7 - 9 ) ஞாயிற்றுக்கிழமை தோறும் தேவனை ஆராதிக்கும்படியாக கூடின கிறிஸ்துவின் சபை அங்கத்தினர் செய்த இரண்டாவது காரியத்தை நாம் பார்ப்போம்.

**கர்த்தருடைய வேலைக்காக அவர்கள் பொருளாதார உதவிகளைச் செய்தார்கள்**

நாம் இப்போது தான் 1 கொரிந்தியர் 16 : 1, 2 வசனங்களை வாசித்தோம். அந்த வசனங்களில் தேவன் ஒரு சபையானது தன்னுடைய வேலைக்காக எப்படி பணத்தை சேகரிக்க வேண்டும் என்று தம்முடைய எதிர்பார்ப்பை விருப்பத்தை தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் மூலமாக தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார். அதாவது ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாரத்தின் முதல்நாள் தோறும் தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்.

1, 2 ம் வசனங்களில் தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் காணிக் கையைக் குறிப்பிட்டுப் பேசுகிறார். வேறொரு வார்த்தையில் சொன்னால் ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவருக் கென்று காணிக்கை கொடுக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க் கிறார். இந்த வசனபகுதியும், மொழிநடையும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் செலுத்தும் காணிக்கையானது பிராந்திய சபையில் உள்ள கருவூலத்தில் கர்த்தருடைய வேலைக்காக சேர்த்து வைக்க வேண்டும் என்று காட்டுகிறது.

**ஒவ்வொரு கிறிஸ்தவனும் எவ்வளவு கொடுக்க வேண்டும் ?**

புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று தேவன் ஒரு குறிப்பிட்ட தொகையையோ சதவீதத்தையோ குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆயினும் அவரைப்பிரியப்படுத்த வேண்டு மென்றால் உற்சாகமாய்க் கொடுக்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்தி விட்டார். கர்த்தருக்குச் சித்தமானால் வருகின்ற மாதம் இந்தப் பாடத்தைக் குறித்து அநேக வசனங்களைப் படிப்போம். அதுவரை புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற அவருடைய நேசகுமாரனுடைய ஒன்றான மெய்சபையில் தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க ஜாக்கிரதையாக பாடுபடுவோம்.